யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, யூலை - 2015
Term Examination, July - 2015

| வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2016) |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 4 | 4. 5 | 7. 4 | 10. 5 | 13. 2 |
| 2. 4 | 5. 3 | 8. 2 | 11. 3 | 14. 4 |
| 3. 2 | 6. 1 | 9. 1 | 12. 2 | 15. 1 |

16. (அ) விருப்பம், கொள்வனவு சக்தி (ஆ) கைத்தொழில் பொருள் **(2 x 1 = 2 புள்ளி)**

17. (அ) இயற்கைச்சூழல், பூகோளச்சூழல் (ஆ) வியாபாரவங்கி, முயற்சியாண்மை மூலதனக் கம்பனி **(2 x 1 = 2 புள்ளி)**

18. (அ) கட்டுண்ட கடை (ஆ) நேர்முறை, முகவர் முறை **(2 x 1 = 2 புள்ளி)**

19. (அ) இந்தியன்வங்கி, இந்தியன் ஓவசீஸ்வங்கி, HSBC, ICICI வங்கி, சிற்றி வங்கி, ஸ்ராண்டட் சாட்டட் வங்கி
    (ஆ) சிக்கனக் கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (சனச) **(2 x 1 = 2 புள்ளி)**

20. (அ) இலத்திரனியல் வணிகம், பூகோளமயமாதல், வணிகப்போட்டி **(2 புள்ளி)**
    (ஆ) உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி, வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி **(2 x 1 = 2 புள்ளி)**

21. 1. அறியும் ஊக்கத்துடன் செயலாற்றல்
    2. செயற்பாட்டு ரீதியாகப் பங்களித்தல்
    3. சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்
    4. சூழல் பற்றிய அறிவு
    5. ஏனையோருடன் இணைந்து செயற்படல் **(சரியான 4 விடயம் 2 புள்ளி)**

22. 1. பங்காளர்கள் 2 – 20 பேர் காணப்படல்
    2. பங்காளர்களிடையே ஒப்பந்தம் ஒன்று காணப்படல்
    3. ஏதாவது வணிக முயற்சி ஒன்று நடைபெறல்
    4. இலாபப் பங்கீட்டுக்கான ஒப்பந்தம் இருத்தல்
    5. பரஸ்பர முகவராண்மை **(சரியான 4 விடயம் 2 புள்ளி)**

23. (அ) 1. கைத்தொழில் அபிவிருத்திச்சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் **(2 x ½ = 1 புள்ளி)**
    (ஆ) இழப்பீடு, பதிவாள்வைப்பு, பங்களிப்பு **(2 x ½ = 1 புள்ளி)**

24. (அ) இன்டர்கொம், கடிதம், சுற்றறிக்கை, அறிவித்தல்கள், அறிவித்தல் பலகை, கூட்டங்கள், பணியாளர்கள் **(1 புள்ளி)**
    (ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு **(1 புள்ளி)**

25. (அ) தரகுமுகவர் **(1 புள்ளி)**
    (ஆ) நேரில் உற்பத்தி, உற்பத்திக்கிரயம், பூகோளமயமாதல், உற்பத்தியில் மிகை அல்லது குறைவு, வகைகளில் வேறுபட்டிருத்தல், பொருட்களின் மேம்பாடு, வியாபாரத் தடைகள் குறைவாகக் காணப்படல் **(1 புள்ளி)**

(25 x 2 = 50 புள்ளிகள்)

## பகுதி II

## பகுதி I

**01.**

1. ஒரு உற்பத்திப்பொருள் தொடர்பாக தனிநபரிடமுள்ள விருப்பமும் அதனைக் கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றலாகிய கொள்வனவு சக்தியினால் கேள்வி உருவாகும். (2 புள்ளி)

2. நுகர்பொருட்களின் வகைகள்

   1. வசதிப்பொருள் 2. கடைப்பொருள்

   3. சிறப்புப்பொருள் 4. நாடப்பெறாத பொருள் (குறிப்பிட்ட 4 = 1 புள்ளி)

   நுகர்வோர் அடிக்கடி கொள்வனவு செய்யும் பொருட்கள் (உ-ம் : பத்திரிகை)
   விலை, தரம் என்பவற்றை ஒப்பீடு செய்து கொள்வனவு செய்யும் பொருட்கள் (உ-ம் : தளபாடம்)

   கூடிய முயற்சி செய்து கொள்வனவு செய்யும் பொருட்கள் (உ-ம் : மோட்டார் வாகனம்)
   சந்தையில் பொருட்கள் இருப்பினும் நுகர்வோர் அறிந்திராத பொருட்கள்

   (விளக்கம் 4 = 1 புள்ளி)

3. 1. சந்தையில் நிலைத்திருத்தல். 2. இலாபத்தை உச்சப்படுத்தல்.
   3. விற்பனையை உச்சப்படுத்தல் 4. சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொள்ளல்
   5. சமூகப் பொறுப்பினைப் பேணுதல் 6. வளர்ச்சி நோக்கம்

   (4 x ½ = 2 புள்ளி)

4. ஆம்,
   உரிமையாளர், முகாமையாளர், ஊழியர் அமைப்பு கலாசாரம், அமைப்பு முறை, வளங்கள் என்பன அகச்சூழலில் தொழிற்படுகின்றன. வணிகத்தின் வெற்றிக்கு வணிகத்தின் பலம், பலவீனம் ஆராயப்படவேண்டும். வணிகத்தின் அகச்சூழலை அறிந்துகொள்வதனூடாக பலங்கள் மற்றும் பலவீனங்களை இனங்காண முடியும். இதனால் அப்பலன்களை வணிகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த முடிவதுடன் பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

   (முழுமையான விடைக்கு 2 புள்ளி)

5.

| அக்கறை செலுத்தும் தரப்பினர் | வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் |
|---|---|
| 1. உரிமையாளர் | தேவையான மூலதனப் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல், வாழ்தன்மையினை உறுதிப்படுத்தல். |
| 2. முகாமையாளர்கள் | வணிகத்திட்டத்தைச் சரியான முறையில் செயற்படுத்தல், சரியான தீர்மானமெடுத்தல் |
| 3. ஊழியர்கள் | ஊழிய வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு ஊழியர்களின் வேலையில் திருப்தியினை ஏற்படுத்தல் |
| 4. கடன் வழங்குநர்கள் | தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்ற நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு |
| 5. அரசு | சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, உட் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு |
| 6. வாடிக்கையாளர் | குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பெற்றுக்கொள்வதற்கு |
| 7. வழங்குநர்கள் | தரமான மூலப்பொருட்களை வழங்குதல், உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குதல். |

(குறிப்பிட்ட விளக்கம் 4 = 2 புள்ளி)

02.

1. **வாடிக்கையாளர்**

1. நியாயமாக இருத்தல்
2. இழப்புக்களைக் குறைத்தல்
3. உரிமைகளைப் பாதுகாத்தல்
4. சிறந்த சேவையை வழங்கல்
5. வாக்குறுதியை நிறைவேற்றல்

(4 விடயம் = 1 புள்ளி)

**சமூகம்**

1. வேலைவாய்ப்பில் பங்களிப்புச் செய்தல்
2. வரியை ஒழுங்காகச் செலுத்துதல்
3. கழிவுப்பொருள் முகாமைத்துவம்
4. சமூக நலனோம்புச் சேவைகள்
5. பசுமை உற்பத்திகள்
6. சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில் செயலாற்றல்

(4 விடயம் = 1 புள்ளி)

2. **சமூகப் பொறுப்பு**

பங்குதாரர் (உரிமையாளர்) ஊழியர், வாடிக்கையாளர், சமூகம் போன்ற சகல பிரிவினருக்கும் தீங்கு ஏற்படாத வகையில் செயற்படுதல் ஆகும். (1 புள்ளி)

வணிக விழுமியம்

வணிகங்கள் தம்முடன் சேவையாற்றுகின்ற சகல தரப்பினருக்கும் நல்லது இடம்பெறக்கூடிய முறையில் நல்லது தீயது தொடர்பான அவதானத்துடன் செயற்படல் வணிக விழுமியங்கள் ஆகும். (1 புள்ளி)

3. வரிவருமானம் வரி அறவிடுவதன் மூலம் பெறப்படும். (½ புள்ளி)

உ-ம் : நேர்வரி, நேரில் வரி (½ புள்ளி)

வரி தவிர்ந்த ஏனைய முறைகளில் அரசு பெறும் வருமானம் வரியல்லா வருமானம் ஆகும். (விளக்கியிருப்பின் ½ புள்ளி)

உ-ம் : தண்டப்பணம், முத்திரைக்கட்டணம் (½ புள்ளி)

4.
1. முழுமையான ஏற்றுமதிப் பரிசோதனை மூலம்
2. இறக்குமதிப் பரிசோதனை மூலம்
3. ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட கடல் உணவுப் பொருட்கள் பரிசோதனை மூலம்

(2 x 1 = 2 புள்ளி)

5.
1. பங்குடைமையின் பெயர் முகவரி
2. பங்குடைமை வணிகத்தின் தன்மை, நோக்கம்
3. ஒவ்வொரு பங்காளரதும் மூலதனப் பங்களிப்பு விகிதம்
4. இலாபநட்டம் பகிர்ந்துகொள்ளும் விகிதம்
5. பங்காளர் பற்று தொடர்பான விபரம்
6. மூலதனத்துக்கான வட்டியும் பற்றுக்கான வட்டியும்
7. பங்காளரின் உரிமையும் கடமையும்
8. பங்காளர் சேர்தல், விலகல், இளைப்பாறல் முறை (4 x ½ = 2 புள்ளி)

03.

1. **ஒற்றுமைகள்**

1. இரண்டிற்கும் பங்குலாபம் வழங்கப்படும்.
2. இரண்டும் நீண்டகால நிதி பெறும் வழிகளாகும்.
3. இரண்டினையும் கைமாற்றம் செய்ய முடியும்.
4. இரண்டும் வரையறுத்த கம்பனிகளினால் வழங்கப்படுகின்றது.

(2 x ½ = 1 புள்ளி)

**வேறுபாடுகள்**

| **சாதாரண பங்கு** | **முன்னுரிமைப் பங்கு** |
| --- | --- |
| 1. பங்குலாபம் முன்னரே தீர்மானிக்கப்பட்டு இராது. | • பங்குலாபத்தொகை முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருக்கும். |
| 2. வாக்களிக்கும் உரிமை உண்டு | • வாக்களிக்கும் உரிமை இல்லை |
| 3. உரிமையாளராகக் கருதப்படுவர் | • கடன்காரராகக் கருதப்படுவர் |
| 4. பெறக்கூடிய உச்ச பங்குலாபத் தொகைக்கு எல்லை இல்லை. | • உச்ச பங்குலாபத்தொகை வரையறுக்கப்பட்டு இருக்கும். |

(2 x ½ = 1 புள்ளி)

2. (அ) பங்குவழங்கல், தொகுதிக்கடன் / கடன் மூலதனம் (2 x ½ = 1 புள்ளி)

(ஆ) பங்கு

1. அதிகளவான மூலதனத்தைத் திரட்டிக்கொள்ளலாம்.
2. திரட்டப்பட்ட மூலதனத்தை வணிகம் முடிவுறும் வரை தேக்கி வைத்துக்கொள்ளலாம்.
3. வட்டி செலுத்தவேண்டிய அவசியமில்லை.
4. ஆபத்துத் தன்மை குறைவு

(2 x ¼ = ½ புள்ளி)

தொகுதிக்கடன்

1. வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது
2. முகாமையில் இவர்கள் தலையீடு செய்ய முடியாது.
3. தேவையானபோது கடனைத் தீர்த்து விடுதலை பெற முடியும்.

(2 x ¼ = ½ புள்ளி)

3.
1. அதனது வியாபாரக் குறியினைப் பயன்படுத்துவதற்கான அனுமதியினை வழங்குதல்.
2. முகாமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்
3. சந்தைப்படுத்தலுக்கான உதவிகளை வழங்குதல்
4. நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்
5. விற்பனை நிலையத்தினை அமைத்துக் கொடுத்தல்
6. நுட்பமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல் (4 x ½ = 2 புள்ளி)

4.
1. சட்டம் வேறுபடல்
2. பதிவுசெய்யும் முறை
3. இலாபப் பகிர்விலுள்ள வேறுபாடு
4. நோக்கம் வேறுபடல்
5. வாக்களிக்கும் உரிமை வேறுபாடு
6. குறைந்த உறுப்பினர் வேறுபாடு (4 x ½ = 2 புள்ளி)

5.
1. சுயமதிப்பீட்டின் மூலம்

   முதலாவதாக முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை உறுதியாக இனங்கண்டு அத்தேர்ச்சிகள் தன்னுள்ளே எந்தளவிற்குக் காணப்படுகின்றன? தன்னிடமில்லாத தேர்ச்சிகள் எவை? மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் எவை? என்பவை தொடர்பான சுயமதிப்பீடு.
2. பயிற்சியும் கல்வியும்

   முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை வளர்த்துக்கொள்வதற்கு காணப்படும் பல்வேறு பயிற்சி வேலைத்திட்டம் மூலமும், சாதாரண கல்விக்கு மேலதிகமாக முயற்சியாண்மை தொடர்பாகப் பெறுகின்ற கல்வியின் மூலமும்.
3. அனுபவம்

   வேறு முயற்சியாண்மைக் கருமங்களை மேற்கொள்ளும் போது அல்லது தானே முயற்சியாண்மையாளர் ஒருவராக வேலை செய்யும் போது கிடைக்கின்ற அனுபவங்கள் மூலம். (குறிப்பிட 2x1 = 1 புள்ளி, விளக்கம் 2x1 = 1 புள்ளி)

## பகுதி II

**04.**

1. (அ)

1. வணிகத்தின் தன்மை
2. உற்பத்தியின் தன்மை
3. தேவையான முறையும் அதனைப் பெற்றுக்கொள்ளும் முறையும்
4. போட்டி
5. சந்தையின் தன்மை
6. சந்தையில் செல்வாக்குச் செலுத்தும் சட்டதிட்டங்கள்
7. சுயபலம் (4 விடயம் = 1 புள்ளி)

(ஆ) 1. நிலையான அரசியல் பொருளாதாரப் பின்னணி காணப்படல்
2. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்
3. நிதி மற்றும் வரிச்சலுகைகள் போன்ற ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்
4. விரிவான சந்தை காணப்படல்
5. நிறுவனரீதியான வசதிகள் விற்பனை வசதிகள் போன்றவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

(4 விடயம் = 1 புள்ளி)

2. 1. தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM)
2. விற்பனையின் போதான நிதிமாற்றல் முறைமை
3. இணைய மூலமான வங்கிச்சேவை
4. தொலைபேசி வங்கிச்சேவை (4 x ½ = 2 புள்ளி)

3. காசோலை முகப்பில் குறிப்பிட்டுள்ள முறையில் பெறுபவர் தனது பெயரைக் காசோலையின் பின்பக்கத்தில் எழுதுதல் புறக்குறிப்பிடல் என அழைக்கப்படும். (1 புள்ளி)
1. பெறுபவர் காசோலையை வங்கியில் வைப்புச்செய்யும் போது
2. கட்டளைக் காசோலை ஒன்றாயின் வேறொரு நபருக்கு வழங்கும் சந்தர்ப்பத்தின் போது
3. குறுக்குக் கோடிடப்படாத காசோலை ஒன்றை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்துக் காசாக்கும் போது (2 x ½ = 1 புள்ளி)

4. மனித தேவைகள், விருப்பங்களை நிறைவுசெய்கின்ற தொட்டுணரக்கூடிய பௌதிகத் தன்மை கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பொருள் உற்பத்தி வணிகம் எனப்படும். (விளக்கம் 4 புள்ளி)

உ-ம் : தயாரிக்கப்பட்ட உணவு, குடிபானங்கள், சலவை இயந்திரம் (½ புள்ளி)

வணிகமொன்றின் மூலம் நுகர்வோரது தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நுகர்வோருக்கு வழங்கப்படும் ஒரு செயற்பாடு அல்லது செயன்முறை சேவைகள் என அழைக்கப்படும். இக்கருமங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் சேவை உற்பத்தி வணிகம் எனப்படும். (விளக்கம் ½ புள்ளி)

உ-ம் : காப்புறுதி நிறுவனங்கள், வங்கிகள், அழகுக்கலை நிலையங்கள் (½ புள்ளி)

5.

| உரிமம் பெற்ற வணிக வங்கி | உரிமம் பெற்ற விசேட வங்கி |
|---|---|
| 1. நடைமுறைக் கணக்குகளைப் பேண முடியும் | • நடைமுறைக் கணக்குகளைப் பேண முடியாது |
| 2. அந்நியசெலாவணிக் கொடுக்கல் வாங்கல் களை மேற்கொள்ள முடியும் | • அந்நியசெலாவணிக் கொடுக்கல் வாங் கல்களை மேற்கொள்ள முடியாது. |
| 3. இழிவு மூலதனத் தேவைப்பாடு 5000 மில்லியன் | • இழிவு மூலதனத் தேவைப்பாடு 2500 மில்லியன் |
| 4. பண ஆக்கம் செய்யும் | • பண ஆக்கம் செய்யமுடியாது. |

(3 x ½ = 2 புள்ளி)

**05.**

1. (அ) நடைமுறைக் கணக்கில் போதிய பணமில்லாத போது காசோலைகள் வழங்குவதற்கு வணிகவங்கி முகாமையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் அனுமதி ஒன்றே வங்கி மேலதிகப்பற்று எனப்படும். (1 புள்ளி)

   (ஆ)1. குறுங்கால நிதியைப் பெறும் வழிமுறை
   2. மேலதிகப்பற்றினைப் பயன்படுத்தும் கால அளவிற்கு மட்டுமே வட்டி அறவிடப்படும்.
   3. பொதுவாகப் பிணை அவசியமில்லை.
   4. மேலதிகப்பற்று அங்கீகரித்தல் இலகுவானது.
   5. இலகுவாகத் திருப்பிச் செலுத்தலாம். (4 விடயம் = 1 புள்ளி)

2. வணிகம் என்பது இடரை எதிர்நோக்குவதாகும். இவ்விடரானது எதிர்பாராத விதமாக ஏற்படுவதாகும். இந்நிலையில் நட்டத்தினால் வணிகம் செயலிழக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆனால் காப்புறுதி செய்யப்பட்டிருந்தால் வணிகத்தை தொடர்ந்து செயற்படுத்தக்கூடியதாக இருக்கும். எனவே காப்புறுதி காணப்படுவதன் காரணமாக மக்கள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். (2 புள்ளி)

3. 1. மீள் காப்புறுதியின் மூலம் காப்புறுதிக் கம்பனிகளது பொறுப்புக்கள் பரவலாக்கப்படுவதனால் காப்புறுதி செய்பவரிடம் அறவிடப்படும் காப்புறுதிக் கட்டணம் குறைந்தளவில் காணப்படும்.
   2. அதிக பெறுமதி கொண்ட சொத்துக்களைக் காப்புறுதிசெய்ய முடியுமாக இருப்பதனால் இழப்பீடு கிடைக்கும் என்ற உறுதிப்பாடு இருக்கும். (2 x 1 = 2 புள்ளி)

4. 1. பெருமளவு பொருட்களை ஒரே முறையில் கொண்டுசெல்லக்கூடியதாக இருத்தல்.
   2. தெருப்போக்குவரத்தை விடப் பாதுகாப்பானதாய் இருத்தல்
   3. பொருட்களின் தன்மைக்கு ஏற்ப பெட்டிகளைப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்
   4. ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைவு (4 x ½ = 2 புள்ளி)

.

5.

| **அம்சங்கள்** | **உதாரணங்கள்** |
|---|---|
| 1. வழிப்பாதை | பெருந்தெரு, ஆகாயவழி |
| 2. ஊடகம் / சாதனம் | துவிச்சக்கரவண்டி, கப்பல் |
| 3. சக்தி / வலு | மனிதசக்தி, காற்று |
| 4. தரிப்பிடம் | விமானநிலையம், துறைமுகம் |

(அம்சம் 1 புள்ளி, உதாரணம் 1 புள்ளி)

**06.**

1. (அ) செய்திகளைப் பெற்றுக்கொள்பவரின் கருத்துக்களை அறிந்து அதற்குப் பொருத்தமான முறையில் செய்தியை அனுப்ப முடியும். (1 புள்ளி)

   (ஆ) 1. வியாபாரக் கொடுக்கல்வாங்கலின் போது உரிய தரப்பினர்களிடையே கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு.
   2. உரிமையாளர் ஊழியர் தொடர்பினைப் பேணுவதற்கு
   3. விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு
   4. மனித, பௌதிக வளங்களைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு

   (2 x ½ = 1 புள்ளி)

2. **அனுகூலங்கள்**
   1. வியாபார நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளல்
   2. செலவுகளை இழிவுபடுத்திக்கொள்ளலாம்.
   3. சந்தையை அண்மித்தல்
   4. தெரிவுக்கான எண்ணிக்கை அதிகம்
   5. 7 நாட்களும் 24 மணித்தியாலமும் சேவையைப் பெறலாம்.

   (4 x ¼ = 1 புள்ளி)

**பிரதிகூலங்கள்**

1. குறிப்பிட்ட உபகரணத்தைப் பயன்படுத்துவதில் வசதியீனங்கள் காணப்படல்
2. பரவலாக்கலில் காணப்படும் வரையறைகள்
3. பயன்படுத்தும்போது பாதுகாப்புத் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படல்
4. வியாபார வாடிக்கையாளர் நேருக்கு நேர் சந்திக்க முடியாமை

(4 x ¼ = 1 புள்ளி)

3. 1. நவீன முகாமைத்துவ நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்
   2. பொதுவாகப் பாரியளவான சில்லறை வியாபார நிலையங்களை நடத்திச்செல்லல்
   3. அதிகளவான இருப்புக்களைப் பேணாது தேவையான அளவுகளில் உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்
   4. கணினி மயப்படுத்தப்பட்ட விலைக்குறியீடு
   5. இலத்திரனியல் பணப் பயன்பாடு மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

(4 x ½ = 2 புள்ளி)

4. **அனுகூலங்கள்**
   1. பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்
   2. தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்
   3. உற்பத்திக் கருமங்கள் இலகுவாதல்
   4. சந்தையை விரிவுபடுத்த முடிதல்

(2 x ½ = 1 புள்ளி)

**பிரதிகூலங்கள்**

1. பொருட்களின் விலைமட்டம் உயர்வடையக்கூடியதாக இருத்தல்
2. விலை அதிகரிப்பதனூடாகக் கேள்வி குறைவடைந்து விற்பனை வீழ்ச்சி அடையும்.
3. வாடிக்கையாளருடன் நேரடித்தொடர்பு குறையும். (2 x ½ = 1 புள்ளி)

5.

1. வெளிநாட்டு வழங்குனர் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளல்
2. விலை விசாரணைக் கடிதம் அனுப்புதல்
3. விலைக்கூற்றின் பின்னர் பொருளை இறக்குமதி செய்வது தொடர்பாக பொருத்தமான தீர்மானத்திற்கு
4. இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய பொருட்கள் தொடர்பில் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
5. கட்டளையை வெளிநாட்டு ஏற்றுமதியாளருக்கு அனுப்புதல்
6. ஏற்றுமதியாளருக்கான கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
7. இறக்குமதிப் பொருட்கள் துறைமுகத்திற்கு வந்தபின்னர் அவற்றை விடுவித்தல்

(6 விடயம் ஒழுங்கு முறையில் காணப்பட்டால் மட்டும் 2 புள்ளி வழங்கவும்)